1974 சனவரி 23]

பெற்று, மாலை நேரக் கல்லூரிகளையும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான மாணவர்கள் மாலை நேரக் கல்லூரிகளில் சேரும்போது, அது பற்றித் தனியாக யோசிக்கலாம்.

Sanskrit Colleges

* 37. Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Sanskrit Colleges in our State and the places where they are located;

(*b*) among them, the number of colleges run by the Government and the number of colleges under private management;

(*c*) the number of students studying there; and

(*d*) among them, the number of students belonging to foreign countries and the neighbouring States?

சம்ஸ்கிருதக் கல்லூரி

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் சம்ஸ்கிருதக் கல்லூரிகள் எத்தனை, எங்கெங்கு உள்ளன ?

(இ) அவைகளுள் அரசு எத்தனை நடத்துகிறது ? தனியார் எத்தனை நடத்துகின்றனர் ?

(உ) எவ்வளவு மாணவர் பயில்கின்றனர் ?

(எ) அவர்களுள் அன்னிய நாட்டு—அண்டைய மாநில மாணவர் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சென்னை, மைலாப்பூரில் "சென்னை சம்ஸ்கிருத கல்லூரி" என்ற பெயரில் ஒரு கல்லூரி மட்டும் இம்மாநிலத்தில் உள்ளது.

(இ) சென்னை சமஸ்கிருதக் கல்லூரி தனியார் துறையைச் சார்ந்தது. அரசு துறையில் எக் கல்லூரியும் இல்லை.

(உ) சென்னை சம்ஸ்கிருதக் கல்லூரியில் 20 மாணவர்கள் "சிரோன்மணி" வகுப்பில் பயில்கின்றனர்.

(எ) அன்னிய நாட்டு மாணவர்கள் எவரும் பயிலவில்லை. மைசூர் மாநிலத்தில் இருந்து மூன்று மாணவர்களும், கேரள மாநிலத்திலிருந்து ஒரு மாணவரும், ஆந்திர மாநிலத்திலிருந்து ஒரு மாணவரும் இக்கல்லூரியில் பயில்கின்றனர்.

Conversion of Pulavar Diploma into a Degree.

* 38 *Q*.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation was received by the Government requesting conversion of the Pulavar Diploma into a Degree; and

(*b*) if so, the action taken thereon by the Government?

புலவர் பட்டயத்தைப் பட்டமாக்குதல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) புலவர் பட்டயத்தைப் பட்டமாக்கும்படி அரசிற்கு கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பல்கலைக் கழகங்கள் தான் இது குறித்து முடிவெடுக்க வேண்டும். இது குறித்து அரசும் பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு வருகிறது.

(பிற்பகல் 4-30)

திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புலவர் பட்டயத்தை ஒரு பட்டமாக அங்கீகரிப்பதற்கு ஆங்கிலத்தையும் ஒரு பாடமாக சேர்த்துப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருவது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பி.ஏ. வகுப்புக்குரிய ஆங்கிலத்தில் அவர்கள் அறிவு பெறவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். புகுமுக வகுப்பு, பி.ஏ. வகுப்பு ஆங்கிலத்தில் அவர்கள் அறிவு பெற்றுவிடுவார்களேயானால், அவர்களுக்கு பி.ஏ. பட்டம் வழங்கலாம் என்று மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கின்றது. அதேபோல சென்னைப் பல்கலைக் கழகமும் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றது.